



# சக்கர வியூகம்
SAKKRA VIYUGAM
புலனாய்வு நாளிதழ்
"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"






Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 340 02.06.2026 TUESDAY VAIKASI : 19 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 340 02.06.2026 செவ்வாய்கிழமை வைகாசி : 19 விலை : ரூ.5/-


## மீண்டும் தொகுதி மறுவரையறை மசோதாவை கொண்டு வர

# "மத்திய அரசு தீவிரம்!"

புதுடில்லி: ஜூன்.2-

தொகுதி மறுவரையறை மசோதாவை மீண்டும் கொண்டு வர மத்திய அரசு திட்டமிட்டு உள்ளது. மேலும் ஒரே நாடு, ஒரே தேர்தல் முறையையும் நடைமுறைப்படுத்தவும் முடிவு செய்துள்ளது.

தற்போது பார்லி.யில் 543 லோக்சபா எம்பிக்கள் உள்ளனர். நாடு முழுவதும் தற்போதுள்ள மக்கள்தொகை அடிப்படையில் மறுசீரமைப்பு நடந்தால் இரு அவைகளின் உறுப்பினர்கள் எண்ணிக்கையானது 800 ஆக உயரும் வாய்ப்புகள் அதிகம்.

இந்நிலையில், 2029ம் ஆண்டு லோக்சபா தேர்தலுக்கு முன்னர், தொகுதி மறுவரையறை மசோதா, ஒரே நாடு ஒரே தேர்தல் நடைமுறைக்கு புத்துயிர் அளிப்பது குறித்து மத்திய அரசு பரிசீலித்து வருகிறது. பார்லி. யில் அரசியல் ரீதியான மறு சீரமைப்பை நோக்கமாக கருதி



பிராந்திய கட்சிகளை பாஜ அணுகி வருவதாக தகவல்கள் வெளியாகி இருக்கின்றன.

ஏப்ரல் மாதம் மேற்கு வங்கம், தமிழகம் சட்டசபை தேர்தல் முடிவுகளில் திரிணமுல் காங்கிரஸ், திமுக ஆகிய கட்சிகளுக்கு பின்னடைவு ஏற்பட்டுள்ள சூழல் மத்திய அரசுக்கு உத்வேகம் தந்துள்ளதே இதற்கு காரணம் என்றும் தெரிகிறது.

தொகுதி மறுவரையறை மசோதா மட்டுமல்லாது, நாடு முழுவதும் லோக்சபா, சட்டசபை தேர்தல்களை ஒரே நேரத்தில் நடத்தும் வகையிலான ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதாவை சீரமைத்து தாக்கல் செய்யும் முயற்சிகளையும் மத்திய அரசு மேற்கொண்டு வருகிறது.

இதற்கான முன் மொழிவானது பார்லி. கூட்டுக்குழுவின் பரிசீலனையில் உளளது. இது குறித்து கூட்டுக்குழு தலைவர் பி.பி.சவுத்ரி கூறுகையில், இந்த சட்டம் விரைவில் திருத்தப்படும். உரிய நேரத்தில் அறிக்கையை சமர்ப்பிப்போம் என்றார்.

மேலும், தற்போது மசோதாவின் வடிவத்தில் சில மாற்றங்களை மேற்கொண்டு பாஜ தரப்பு திமுகவை அணுகி உள்ளதாக தெரிகிறது. அவர்களின் ஆதரவை பெறும் வகையில் இம்மசோதாவின் வரைவானது திமுக தலைவர்களுக்கு பகிரப்படும் என்று டில்லி வட்டாரங்கள் கூறி உள்ளன.

## கோயம்பேட்டில் இளம்பெண் கார் ஏற்றி கொல்லப்பட்ட விவகாரம்: இளைஞர்களுக்கு பிரேமலதா அறிவுரை

சென்னை, ஜூன்.2-

இனி இதுபோன்ற கொடூரச் சம்பவங்கள் தொடராமல் இருக்க இளைஞர்கள் பொறுப்புணர்வுடன் செயல்பட வேண்டும் என்று தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் அறிவுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்: சென்னை கோயம்பேட்டில் உள்ள ஒரு தனியார் மதுபான பாரில் ஏற்பட்ட தகராறைத் தொடர்ந்து, 18 வயதுடைய இளம் பெண் யான்சி கார் ஏற்றி கொலை செய்யப்பட்டதாக வெளியாகியுள்ள செய்தி மிகுந்த அதிர்ச்சியையும் வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது.

இலங்கைத் தமிழர் எனக் கூறப்படும் யான்சி, தனது நண்பர்களுடன் பாருக்கு சென்றிருந்த நிலையில், அங்கு இருந்த மற்றொரு குழுவினருடன் ஏற்பட்ட வாய்த்தகராறு பின்னர் வன்முறையாக மாறி இந்தக் கொடூரச் சம்பவம்



நிகழ்ந்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஒரு பெண்ணை கார் ஏற்றி கொலை செய்வது மனித நேயமற்ற மற்றும் கடுமையாகக் கண்டிக்கத்தக்க குற்றச் செயலாகும்.

பெண்களின் உயிர் மற்றும் பாதுகாப்பு தொடர்ந்து கேள்விக்குறியாகும் வகையில் நடைபெறும் இத்தகைய சம்பவங்கள் சமூகத்திற்கு மிகப் பெரிய அச்சுறுத்தலாக உள்ளன. பெண்கள் மீதான வன்முறைகளையும், ஆணாதிக்க மனப் பான்மையையும் எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே, இந்தக் கொலைச் சம்பவத்தில் தொடர்புடையவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை உடனடியாக கைது செய்து, சட்டத்தின் முன் நிறுத்தி கடுமையான தண்டனை வழங்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம்.

"பெண்ணின் உயிர் மலிவல்ல; நீதியே பதிலாக வேண்டும்". இளைஞர்கள் ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும் சமூகத்திற்கு முன் மாதிரியாகத் திகழ வேண்டும். சமூகமே தலைகுனியும் வகையிலான செயல்களில் ஈடுபடக் கூடாது. இனி இதுபோன்ற கொடூரச் சம்பவங்கள் தொடராமல் இருக்க இளைஞர்கள் பொறுப்புணர்வுடன் செயல்பட வேண்டும்.

அவர்களை நல்வழிப் படுத்தும் பெற்றோர்களுக்கும், பாதுகாப்பான சமூகச் சூழலை உருவாக்க வேண்டிய அரசுக்கும் சமமான பொறுப்பு உள்ளது. அனைவரும் தங்களது பொறுப்புகளை உணர்ந்து செயல்பட்டால்தான் இதுபோன்ற துயரச் சம்பவங்கள் மீண்டும் நடைபெறாமல் தடுக்க முடியும்" என்று பிரேமலதா விஜயகாந்த் கூறியுள்ளார்.

## "சிங்கப்பெண்ணுக்கே பாதுகாப்பில்லாத ஆட்சி" தவெக அரசை சாடும் நயினார் நாகேந்திரன்

சென்னை: ஜூன்.2-

"பெண்கள் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக தொடங்கப்பட்ட திட்டத்தின் கீழ் காக்கிச் சட்டை அணிந்த பெண்ணுக்கே பாதுகாப்பை உறுதி செய்யும் திறனற்ற ஆட்சி தான் தூய சக்தியா?" என தமிழக பாஜக தலைவர் நயினார் நகேந்திரன் விமர்சித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் பக்கத்தில், "சிங்கப்பெண்ணுக்கே பாதுகாப்பில்லாத தவெக ஆட்சி. தூத்துக்குடி மாவட்டம் ஆறுமுகநேரி காவல் நிலையத்தில், சிங்கப்பெண் அதிரடிப்படையிலுள்ள பெண் காவலருக்கு காவல் ஆய்வாளர் ஒருவர் பாலியல் தொந்தரவு கொடுத்ததாக எழுந்துள்ள புகார் மிகுந்த அதிர்ச்சியளிக்கிறது.

பெண்கள் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக தொடங்கப்பட்ட திட்டத்தின் கீழ் காக்கி சட்டை அணிந்த பெண்ணுக்கே பாதுகாப்பை உறுதி செய்யும் திறனற்ற ஆட்சி தான் தூய சக்தியா? வெட்கக்கேடு.

'நான் உங்கள் அண்ணன்' என மேடைக்கு மேடை முழங்கும் முதல்வர் விஜய், முதலில் இப்புகாரைத் தீர விசாரித்து, குற்றச்சாட்டு உண்மையாக இருக்கும் பட்சத்தில் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், விளம்பரத் திட்டங்களை அறிமுகம் செய்வதோடு நில்லாது, தமிழகப் பெண்களுக்கான பாதுகாப்பை உண்மையாக உறுதி செய்வதிலும் கவனம் செலுத்த வேண்டும்!" இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

### "அரசியல் சாணக்கியம் + சட்ட நுணுக்கங்கள் + டிஜிட்டல் யுக்தி = சி.டி.ஆர். நிர்மல் குமார்"

# தரவுகளுடன் மோதும் தந்திரசாலி! திராவிடக் கோட்டைகளை அலறவிட்ட அரசியல் சதுரங்கம்

2026 சட்டமன்றத் தேர்தலில் 34.92% வாக்குவங்கியை அள்ளி, 'விசில் புரட்சி' மூலம் புதிய த.வெ.க ஆட்சியை அமைத்துள்ளார் முதலமைச்சர் சி.ஜோசப் விஜய். இந்த அமைச்சரவையில், மிக முக்கியப் பொறுப்பான ஆற்றல் வளங்கள் மற்றும் சட்டத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்று, தமிழக அரசியலின் கவனம் ஈர்த்துள்ளார் சி.டி.ஆர். நிர்மல் குமார்.

**திருப்பரங்குன்றம் டூ கோட்டை:**

மதுரை மாவட்டம் உசிலம்பட்டியை பூர்வீகமாகக் கொண்ட இவர், ஒரு பொறியியல் பட்டதாரி (B.E), சட்டப் பட்டதாரி (LLB) மற்றும் குற்றவியல் முதுகலைப் பட்டதாரி (M.A) ஆவார். படித்த படிப்பிற்கு ஏற்ப சட்டம் மற்றும் ஆற்றல் துறை இவருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. நடந்து முடிந்த 2026 தேர்தலில் மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் தொகுதியில் த.வெ.க சார்பில் போட்டியிட்டு 1,14,316 வாக்குகள் பெற்று இமாலய வெற்றி பெற்றுள்ளார்.

**முந்தைய கட்சிகளின் டிஜிட்டல் மற்றும் கள அனுபவங்கள்:**

அமைச்சர் நிர்மல் குமார் எடுத்தவுடனேயே இந்த உயரத்தை அடைந்துவிடவில்லை. அதற்குப் பின்னால் முந்தைய கட்சிகளில் அவர் பெற்ற அசுர பயன்பாட்டு அனுபவங்கள் உள்ளன:

பா.ஜ.க அனுபவம் (2019 -2023): தமிழ்நாடு பாஜகவின் ஐடி விங் மாநிலத் தலைவராகப் பணியாற்றியபோது, ஆளுங்கட்சியின் குறைகளைத் தரவுகளுடன் சமூக வலைத்தளங்களில் அம்பலப்படுத்துவதில் கைதேர்ந்தவராக விளங்கினார். எதிரிகளுக்கு டிஜிட்டல் நெருக்கடி கொடுக்கும் உத்திகளை இங்குதான் கற்றுக்கொண்டார்.

அ.தி.மு.க அனுபவம் (2023-2025): அதிமுக ஐடி பிரிவின் மாநில இணைச் செயலாளராக எடப்பாடி பழனிசாமி தலைமையில் பணியாற்றினார். ஒரு பிராந்தியக் கட்சிக்குத் தேவையான 'கள அரசியல்' நுணுக்கங்களையும், அடிமட்டத் தொண்டர்களின் கட்டமைப்பையும் இந்த காலகட்டத்தில் மிக நெருக்கமாகக் கற்றுக்கொண்டார்.

**தவெகவின் திட்டமிடல் மூளை:**

தேசியக் கட்சியின் 'டிஜிட்டல் ஆக்ரோஷமும்', திராவிடக் கட்சியின் 'கள அரசியல் நுணுக்கங்களும்' இவருக்குக் கொடுத்த முதிர்ச்சியைத்தான்,




கடந்த 2025ல் தவெகவில் இணைந்த பிறகு, கட்சியின் ஐடி மற்றும் சமூக ஊடகத் துறைக்கான துணைப் பொதுச்செயலாளராக இருந்து விஜய்யின் வெற்றிக்கான 'வெற்றி ஃபார்முலாவாக' மாற்றியமைத்தார்.

**அமைச்சரானதும் காட்டிய அதிரடி:**

அமைச்சராகப் பொறுப்பேற்ற சில நாட்களிலேயே, தவெக அரசின் முதற்கட்ட மக்கள் நல நடவடிக்கையான 717 டாஸ்மாக் கடைகளை மூடும் அதிரடி உத்தரவை முன்னின்று செயல்படுத்தியதில் இவருக்குப் பெரும் பங்குண்டு. "இது வெறும் தொடக்கம் தான்; மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் மக்கள் அரசு இது" என ஊடகங்கள் முன் ஆணித்தரமாகப் பேசி, தவெக அமைச்சரவையின் கொள்கை பலத்தை நிரூபித்துள்ளார்.

அரசியல் சாணக்கியத்தனம், சட்ட நுணுக்கங்கள், டிஜிட்டல் யுக்தி என மூன்றையும் கையில் வைத்துள்ள சி.டி.ஆர். நிர்மல் குமார், தவெக அமைச்சரவையின் மிக முக்கிய "நெருக்கடி மேலாண்மை" அமைச்சராக வலம் வருகிறார் என்பதே தற்போதைய அரசியல் நிலவரம்!

**சக்கர வியூகம் வாய்ஸ்:**

அரசியல் களம் என்பது வெறும் மேடைப் பேச்சு மட்டுமல்ல, அது ஆழமான உத்திகளும், தரவுகளும் அடங்கிய சதுரங்கம்! பா.ஜ.க மற்றும் அ.தி.மு.க ஆகிய இருவேறு துருவக் கட்சிகளின் ஐடி பிரிவுகளில் சி.டி.ஆர். நிர்மல் குமார் பெற்ற பயன்பாட்டு அனுபவங்கள் தான், இன்று தவெகவின் நிர்வாக அமைப்பிற்கும், அவரின் அமைச்சரவைச் செயல்பாடுகளுக்கும் பெரும் பக்கபலமாக மாறியுள்ளது.

மக்கள் நலன் காக்க, இவரின் அமைச்சரவைப் பணி சிறக்க வாழ்த்துகள்.

**இடம்: மதுரை திருப்பரங்குன்றம் 16 கால் மண்டபம் டீக்கடை.**

**மாமா:** ஆமாடா மாப்ளே! தம்பி விஜய் அமைச்சரவையில மிக முக்கியப் பொறுப்பான ஆற்றல் வளங்கள் மற்றும் சட்டத்துறை அமைச்சரா நம்ம ஊர்க்காரர் உட்கார்ந்திருக்கிறது மதுரைக்கே பெருமைதான்டா. அதுவும் சும்மா இல்ல... இந்தத் தேர்தல்ல திருப்பரங்குன்றம் தொகுதியில நின்னு, ஒரு லட்சத்து பதினாலாயிரத்துக்கும் மேல ஓட்டு வாங்கி இமாலய வெற்றி பெற்றிருக்காரு!

**மாப்ளே:** ஆமா மாமா... ஆனா இவர் எடுத்தவுடனேயே இந்த உயரத்துக்கு வரலையாம். அதுக்கு முன்னாடி பா.ஜ.க, அ.தி.மு.கனு ரெண்டு துருவக் கட்சிகளோட ஐடி விங்ல இருந்து அசுர அனுபவம் பெற்றிருக்காரு. பா.ஜ.கவுல இருந்தப்ப டேட்டாவ வச்சு ஆளுங்கட்சியை டிஜிட்டல்ல அலறவிட்டிருக்காரு; அ.தி.மு.கவுல இருந்தப்ப கள அரசியல் நுணுக்கங்களைக் கத்துகிட்டிருக்காரு!

**மாமா:** அங்கதான்டா விஷயமே இருக்கு! தேசியக் கட்சியோட அந்த 'டிஜிட்டல் ஆக்ரோஷமும்', திராவிடக் கட்சியோட 'களம் மற்றும் தொண்டர்கள்' கட்டமைப்பும் இவருக்குக் கொடுத்த முதிர்ச்சியைத்தான், தவெகவுக்கு வந்து 'வெற்றி ஃபார்முலாவா' மாத்திக் காட்டியிருக்காரு. அதான் தம்பி விஜய் இவருக்குச் சட்டத்துறையையும், ஆற்றல் துறையையும் தூக்கிக் கொடுத்திருக்காரு. படித்த படிப்புக்கேத்த பதவிடா மாப்ளே!

**மாப்ளே:** கண்டிப்பா மாமா... டிஜிட்டல் கிங்குக்கு மதுரைக்காரங்க சார்பா வாழ்த்துகள்! சரி மாமா, அப்படியே அந்த ஸ்ட்ராங் டீயக் குடிச்சுட்டு வண்டிய எடுங்க, திருப்பரங்குன்றம் முருகனைத் தரிசனம் பண்ணிட்டுப் போவோம்!

**மாமா:** ஏலேய் மாப்ளே... வண்டிய எடுடா, போவோம்!

# ஆலங்குளம் அருகே தாக்குதலில் ஈடுபட்ட இளைஞரை துப்பாக்கியால் சுட்டுப்பிடித்த போலீஸார்

தென்காசி, ஜூன்.2-
ஆலங்குளம் அருகே திருமண நிகழ்ச்சியில் நடந்த தாக்குதல் சம்பவத்தில் தொடர்புடைய இளைஞரை போலீஸார் துப்பாக்கியால் சுட்டுப் பிடித்தனர். தென்காசி மாவட்டம், ஆலங்குளம் அருகே நெட்டூரில் கடந்த 29ம் தேதி நடந்த திருமண நிகழ்ச்சியில் முகமூடி அணிந்த கும்பல் நுழைந்து, அங்கு இருந்தவர்களை அரிவாள், கத்தி போன்ற ஆயுதங்களால் தாக்கி விட்டு தப்பியது. இதில் 6 பேர் காயமடைந்தனர். இதையடுத்து தனிப்படை போலீஸார், சுத்தமல்லி



அருகே இசக்கிமுத்து, 3 சிறுவர் களையும் ட்ரோன் மூலம் தேடுதல் வேட்டை நடத்தி, நெட்டூரைச் சேர்ந்த மாரியப்பன், பிரமுத்துநவீன், சஞ்சய் என மொத்தம் 8 பேரை கைது செய்தனர். இந்நிலையில், முக்கிய நபரான நெட்டூர் ஐயப்பன் முக்கூடல் அருகே பதுங்கி இருந்தபோது, போலீஸார் சுற்றி வளைத்தனர். அப்போது அவர் அரிவாளால் போலீஸாரை வெட்டியுள்ளார். இதில் ஏட்டு முத்துக்குமார், காவலர் பால சுப்பிரமணியனுக்குகையில் காயம் ஏற்பட்டது. போலீஸார் தற்காப்புக்காக துப்பாக்கியால் சுட்டதில் ஐயப்பனின் வலது காலில் குண்டு பாய்ந்தது. அவர் நெல்லை அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.மேலும் சிலரை தனிப்படை போலீஸார் தேடி வருகின்றனர்

# புலிகள் நடமாட்டம் உள்ள நிலையில் பேரிஜம் ஏரிக்கு தடையை மீறி சென்றவர்கள் யார்? சர்ச்சையில் வனத்துறை

பழநி, ஜூன்.2-
பேரிஜம் ஏரி பகுதியில் புலிகள் நடமாட்டம் இருப்பதால் கடந்த 15 நாட்களாக சுற்றுலாப் பயணிகள் செல்ல வனத்துறை தடை விதித்துள்ளது. இதற்கிடையே, வனத்துறை அதிகாரிகளின் உறவினர்கள் தடையை மீறிச் சென்ற சம்பவம் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.
திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் உள்ள முக்கிய சுற்றுலா தலங்களில் பேரிஜம் ஏரி பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியில் உள்ளது. இதனால் வனத்துறையினரிடம் அனுமதி பெற்றே சுற்றுலாப் பயணிகள் செல்ல முடியும். பேரிஜம் ஏரிக்கு செல்லும் வழியில் தொப்பி தூக்கிப் பாறை, மதிகெட்டான் சோலை, வியூ பாய்ண்ட், அமைதி பள்ளத் தாக்கு உள்ளிட்ட இடங்களை பார்வையிட முடியும். இந்நிலையில் கடந்த மே16ம் தேதி காலை முதல் பேரிஜம்



ஏரி பகுதியில் புலிகள் நடமாட்டம் இருப்பது கண்டறியப்பட்டது. இதனால் பாதுகாப்பு கருதி சுற்றுலாப் பயணிகள் அங்கு செல்வதற்கு மறு அறிவிப்பு வரும் வரை வனத்துறை தடை விதித்துள்ளது. இதனால் சுற்றுலாப் பயணிகள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.இந்நிலையில் தடையை மீறி சிலர் பேரிஜம் ஏரிக்கு வனத்துறை வாகனத்தில் சென்று வருவதும், பின்னர் நுழைவு வாயிலில் இருந்து தங்கள் சொந்த வாகனத்தில் ஏறி செல்வதும் போன்ற வீடியோ அண்மையில் வெளியாகி வைரலானது.சுற்றுலாப் பயணிகளுக்கு தடைஉள்ள நிலையில் வனத்துறை அதிகாரிகள் தங்கள் அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி தங்களுக்கு வேண்டியவர்களை மட்டும் தடையை மீறி பேரிஜம் ஏரிக்குச் செல்ல அனுமதி அளித்ததற்கு பொது மக்கள், சுற்றுலாப் பயணிகள் என பலரும் தங்கள் எதிர்ப்பை தெரிவித்து வருகின்றனர். இது குறித்து வனத்துறை அதிகாரிகளிடம் செல்போனில் தொடர்பு கொண்டு பேச முயன்ற போது, அழைப்பை ஏற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



■ ஈரோடு மாவட்ட அரசு மருத்துவமனை வளாகத்தில் உலக புகையிலை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு, மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுங்காரா, இ.ஆ.ப., தலைமை தாங்கி, உலக புகையிலை ஒழிப்பு தின உறுதிமொழியை வாசிக்க, அங்கு கூடிருந்த அரசு அதிகாரிகள் மற்றும் மருத்துவப் பணியாளர்கள் அதனைப் பின்தொடர்ந்து ஏற்றுக்கொண்டனர். புகையிலையினால் ஏற்படும் தீமைகள் மற்றும் உடல்நலக் கேடுகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதே இந்நிகழ்வின் முக்கிய நோக்கமாகும். செல்வி. டி.வி. கிரண் ஸ்ருதி, இ.கா.ப., ரு மாவட்ட காவல் கண்காணிப்பாளர், மரு. அருணா ரு மாவட்ட சுகாதார அலுவலர், மரு. கௌரிசங்கர் ரு மாநகர நகர் நல அலுவலர் உள்ளிட்ட தொடர்புடைய துறை சார்ந்த மருத்துவ அதிகாரிகள், காவல் துறையினர் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் நேரில் கலந்து கொண்டு விழிப்புணர்வு உறுதிமொழியை ஏற்றுக்கொண்டனர்.

# மேற்கு வங்க அமைச்சரவை விரிவாக்கம் 35 எம்எல்ஏக்கள் அமைச்சர்களாக பதவியேற்பு

கொல்கத்தா, ஜூன்.2-
மேற்கு வங்க முதல்வர் சுவேந்து அதிகாரியின் அமைச்சரவை விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது. புதிதாக 35 பேர் அமைச்சர்களாக பதவியேற்றுள்ளனர். நடந்து முடிந்த மேற்கு வங்க சட்டப்பேரவைத் தேர்தலில் மொத்தமுள்ள 294 தொகுதிகளில் 208 தொகுதிகளில் பாஜக வெற்றி பெற்றதை அடுத்து, கடந்த மே 9ம் தேதி சுவேந்து அதிகாரி மாநிலத்தின் முதல்வராக பதவியேற்றார். அவருடன் திலிப் கோஷ், அக்னிமித்ரா பால், அஷோக் கீர்த்தனியா, நிசித் பிரமாணிக், சுதிராம் துது ஆகிய 5 எம்எல்ஏக்கள் அமைச்சர்களாக பதவியேற்றனர். கொல்கத்தாவில் உள்ள பிரிகேட் பரேட் மைதானத்தில் நடைபெற்ற இந்த பதவியேற்பு விழாவில், ஆளுநர் ஆர்.என். ரவி, முதல்வருக்கும்



அமைச்சர்களுக்கும் பதவிப் பிரமாணமும் ரகசிய காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார். இவ்விழாவில், பிரதமர் நரேந்திர மோடி, மத்திய அமைச்சர்கள் அமித் ஷா, ராஜ்நாத் சிங் உள்ளிட்டோரும், என்டிஏ முதல்வர்கள் மற்றும் துணை முதல்வர்களும் கலந்து கொண்டனர்.
இந்நிலையில், மேற்கு வங்க அமைச்சரவை இன்று விரிவாக்கப்பட்டுள்ளது. தீபக் பர்மன், அர்ஜுன் சிங், ஷங்கர் கோஷ், கவுரி சங்கர் கோஷ், தபஸ் ராய், மனோஜ் குமார் ஓரன், ஜகந்நாத் சட்டோபாத்யாய, அஜோய் போத்தார், ஸ்வபன் தாஸ் குப்தா, ஷரத்வாத் முகர்ஜி, கல்யாண் சக்ரவர்த்தி உள்ளிட்ட 35 எம்எல்ஏக்கள் இன்று அமைச்சர்களாக பதவியேற்றனர். மக்கள் மாளிகையில் நடைபெற்ற இதற்கான விழாவில் ஆளுநர் ஆர்.என். ரவி அனைவருக்கும் பதவிப் பிரமாணமும் ரகசிய காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார்.
இவ்விழாவில், முதல்வர் சுவேந்து அதிகாரி, அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# புதுச்சேரியில் வீடு பட்டியலிடுதல், வீட்டுவசதி கணக்கெடுப்பு பணிகள் தொடக்கம்

புதுச்சேரி, ஜூன்.2-
புதுச்சேரி யூனியன் பிரதேசம் முழுவதும் 2027ம் ஆண்டுக்கான இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பின் முதற்கட்ட வீடு பட்டியலிடுதல் மற்றும் வீட்டுவசதி கணக்கெடுப்பு பணிகள் இன்று முதல் தொடங்கியது.“ஜூன் 30 வரை நடக்கும் இந்த கணக்கெடுப்பில் மக்களை ஊழியர்கள் வீடு வீடாகச் சென்று சந்திக்கிறார்கள். மக்களிடம் 33 கேள்விகள் கேட்கப்படும். இந்தப் பணியில் 3 ஆயிரம் ஊழியர்கள் ஈடுபடுகின்றனர். தவறான தகவல் தந்தால் அபராதம் விதிக்கப்படும்,” என ஆட்சியர் குறிப்பிட்டுள்ளார்.புதுச்சேரியில் கடந்த மே மாதத்தில் 15 நாட்களுக்கு சுயகணக்கெடுப்பு



பணிகள் நிறைவடைந்தன. அதைத்தொடர்ந்து புதுச்சேரியில் வீடுதோறும் சென்று கணக்கெடுப்பு மேற்கொள்ளும் பணிகள் தொடங்கின.புதுச்சேரி யூனியன் பிரதேசம் முழுவதும் 2027ம் ஆண்டுக்கான இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பின் முதற்கட்ட வீடு பட்டியலிடுதல் மற்றும் வீட்டுவசதி கணக்கெடுப்பு பணிகள் இன்று முதல் தொடங்கியது. பணிகளை மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் லாஸ்பேட்டை குறிஞ்சி நகரில் தொடங்கி வைத்து பார்வையிட்டார். தமிழகம் மற்றும் புதுச்சேரிக்கான மக்கள் தொகை கணக்கெடுப்பு இயக்குநர் சுந்தரேஷ்பாபு தலைமையில் 3000 கணக்கெடுப்பு ஊழியர்கள் இப்பணியில் ஈடுபட்டுள்ளனர். புதுச்சேரி, காரைக்கால், மாஹே மற்றும் ஏனாம் ஆகிய பிராந்தியங்களில் கணக்கெடுப்பு வீடுதோறும் நேரடியாக சேகரிக்கப்படுகிறது. இதற்காக நியமிக்கப்பட்டுள்ள கணக்கெடுப்பு அதிகாரிகள் அனைத்து வீடுகளுக்கும் நேரில் வந்து தகவல்களை சேகரிக்க துவங்கினர். வரும் ஜூன் 30 வரை கணக்கெடுப்பு நடக்கிறது. இந்த கணக்கெடுப்பில், வீட்டின் வசதிகள் மற்றும் நிலைகள் குறித்து 33 கேள்விகளை அதிகாரிகள் கேட்டனர். அதற்கு பொதுமக்கள் உண்மையான பதில்களை அளிக்க வேண்டும் என மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளது. இப்பணி தொடர்பாக ஆட்சியர் குலோத்துங்கன் கூறியதாவது: கணக்கெடுப்பு நோக்கங்களுக்காக அதிகாரிகள் வீடுகளின் வளாகத்திற்குள் வருவதையும், கணக்கெடுப்பு எண்கள் அல்லது குறியீடுகளை இடுவதையும் அனுமதித்து பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும்.துறையால் சேகரிக்கப்படும் தனிநபர் தகவல்கள் அனைத்தும் சட்டப்பிரிவு 15ன் கீழ் முற்றிலும் ரகசியமாக பாதுகாக்கப்படும். இந்த விவரங்கள் எந்தவொரு சிவில் அல்லது குற்றவியல் நடவடிக்கைகளிலும் ஆதாரமாக பயன்படுத்தப்படாது. வரும் 30ம் தேதி வரை நடைபெறும் கணக்கெடுப்பிற்கு ஒத்துழைக்காத சூழல் இருந்தாலோ அல்லது வேண்டுமென்றே தவறான தகவல்களை அளித்தாலோ சட்ட விதிகளின்படி ரூ 1000ம் வரை அபராதம் விதிக்கலாம்” என்றார்.

# “குதிரை பேரம் நடக்கவில்லை; நீதிமன்றம் சென்றால் சட்டரீதியாக எதிர்கொள்வோம்” அமைச்சர் நிர்மல் குமார்

சென்னை, ஜூன்.2-
“திமுக அதிமுக இணைந்து ஆட்சி அமைக்க முயற்சி செய்ததால் அதிமுகவினர் தவெகவுக்கு வருகின்றனர். இங்கு குதிரை பேரம் 100 சதவிகிதம் நடக்க வில்லை. பேரம் பேச வேண்டிய அவசியம் இல்லை. அவர்கள் நீதிமன்றம் சென்றால் அதை சட்டப்படி எதிர்கொள்வோம்” என அமைச்சர் சிடிஆர் நிர்மல் குமார் தெரிவித்துள்ளார்.
இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, “தகுதி அடிப்படையிலேயே அரசு வழக்கறிஞர்கள் நியமனம் செய்யப்படுவார்கள். ஏற்கெனவே பணம் கொடுத்து நியமனம் நடைபெற்றதாக கேள்விப்பட்டோம். இனி அப்படி நடக்காது; ஏற்கெனவே உள்ள வழிகாட்டுதலின் அடிப்படையில் நியமனம் நடைபெறுகிறது. அரசு வழக்கறிஞர்கள் நேர்மையாகவும்,



நியாயமாகவும் நியமிக்கப்பட உள்ளனர்.மேகேதாட்டு அணை கட்ட முதல்வர் விஜய் அனுமதிக்க மாட்டார். இதற்கு தமிழக அரசு சட்டப்படி நடவடிக்கை எடுக்கும். அதிமுக எம்எல்ஏக்கள் ஏன் தங்களது பதவிகளை ராஜினாமா செய்தார்கள், அதிமுகவில் ஏன் பிளவு ஏற்பட்டது என அவர்களே விளக்கி உள்ளார்கள். எடப்பாடி பழனிசாமி, மு.க.ஸ்டாலின், உதயநிதி மற்றும் இன்னும் சிலர் சேர்ந்து ஆட்சி அமைக்க முயற்சி செய்தார்கள். இதை அங்கிருந்த இரண்டு கட்சிக்காரர்களும் ஏற்றுக் கொள்ளவில்லை. இதை திமுக கூட்டணியில் இருந்து வெளியேற்றிய தலைவர்களும் தெளிவாக சொல்லிவிட்டனர்.அவர்கள் தங்களது குடும்பத்தை காப்பாற்ற முயற்சி செய்தனர். இதை நம்பி அக்கட்சி தொண்டர்கள் எப்படி அங்கு பயணிப்பார்கள். திமுக அதிமுக இணைந்து ஆட்சி அமைக்க முயற்சி செய்ததால் அதிமுகவினர் தவெகவுக்கு வருகின்றனர். இது அவர்களின் தனிப்பட்ட முடிவு; இதை நாம் எப்படி தவறு என சொல்ல முடியும். இங்கு குதிரை பேரம் 100 சதவிகிதம் நடக்க வில்லை. பேரம் பேச வேண்டிய அவசியம் இல்லை. அவர்கள் நீதிமன்றம் சென்றால் அதை சட்டப்படி எதிர்கொள்வோம். எங்கள் கூட்டணி கட்சிகள் எங்களுக்கு தோளோடு தோள் கொடுக்கிறார்கள்” இவ்வாறு அவர் பேசினார்

# முப்படைத் தலைமை தளபதியாக தமிழகத்தின் ராஜா சுப்பிரமணி பதவியேற்பு

புதுடெல்லி, ஜூன்.2-
முப்படை தலைமை தளபதியாக இருந்த ஜெனரல் அனில் சவுகானின் பதவிக்காலம் நேற்று முன்தினம் நிறைவடைந்தது. இதையடுத்து நாட்டின் 3வது முப்படை தலைமை தளபதியாக தமிழகத்தைச் சேர்ந்த ஜெனரல் ராஜா சுப்பிரமணி நேற்று பதவியேற்றார்.




இவர் தேசிய பாதுகாப்பு அகாடமி மற்றும் இந்திய ராணுவ அகாடமியில் பயிற்சியை முடித்து கடந்த 1985ம் ஆண்டு இந்திய ராணுவத்தின் கர்வால் ரைபிள்ஸ் படைப்பிரிவில் அதிகாரியாக சேர்ந்தார். பல பிரிவுகளில் தலைமை அதிகாரியாக பணியாற்றியவர். ராணுவத் துணை தளபதியாக பணியாற்றிய இவர் கடந்த ஆண்டு ஜூலை 31ம் தேதி ஓய்வு பெற்றார்.பாகிஸ்தான் மற்றும் சீனா நிலவரங்களை இவர் நன்கு அறிந்தவர் என்பதால், தேசிய பாதுகாப்பு கவுன்சில் தலைமை செயலகத்தில் ராணுவ ஆலோசகராக பணியாற்றி வந்தார்.புதிய கடற்படை தளபதி:இந்திய கடற்படை தளபதியாக இருந்த அட்மிரல் தினேஷ் குமார் திரிபாதி ஓய்வு பெற்றதையடுத்து, நாட்டின் 27வது கடற்படை தளபதியாக அட்மிரல் கிருஷ்ண சுவாமி நாதன் நேற்று பொறுப்பேற்றார்.புதிய கடற்படை தளபதி கிருஷ்ண சுவாமி நாதன்இவர் கடற்படையில் கடந்த 1987ம் ஆண்டு சேர்ந்தார். கடற்படையில் சிறந்த பணிக்காக பரம் விசிஷ்ட் சேவா, அதி விசிஷ்ட் சேவா மற்றும் விசிஷ்ட் சேவா பதக்கங்களை இவர் வென்றுள்ளார்.

# சிபிஎஸ்இ 12ம் வகுப்பு தேர்வுக்கான மறுமதிப்பீடு தாமதம் மாணவர்கள் அவதி

டெல்லி, ஜூன்.2-
சிபிஎஸ்இ 12ம் வகுப்பு தேர்வுக்கான மறுமதிப்பீடு தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதால் மாணவர்கள் அவதியடைந்துள்ளனர்.
இந்நிலையில் ஒடிசா மாநிலத்தை சேர்ந்த அங்கிதா எனும் மாணவி மறுமதிப்பீட்டுக்கு விண்ணப்பித்த நிலையில் அவருடைய விடைத்தாள் இரண்டு பக்கங்கள் காணாமல் போன விவகாரம் நாடு முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இன்று மறுமதிப்பீட்டுக்கு விண்ணப்பிக்க முயன்றபோது இணையதளம் முடங்கியதால் மாணவர்கள் அதிர்ச்சி அடைந்தனர். CBSE இணையதளம் பராமரிப்பில் உள்ளதாக காட்டப்பட்டது.
இதேபோல் மே 19ல் மறுமதிப்பீட்டுக்கு விண்ணப்பிக்கும்போது இணையதளத்தில் பல்வேறு கோளாறுகள் ஏற்பட்டன. மேலும் மதிப்பெண் சான்றிதழ் பெறுவதில் சிக்கல் ஏற்பட்டது. போதுமான தொழில்நுட்ப வசதிகளை உருவாக்காத CBSE மீது பெற்றோர், மாணவர்கள் மற்றும் கல்வியாளர்கள் கடுமையான கண்டனம் தெரிவித்துள்ளனர்

# நாக்பூர்: பெண்ணிடம் ரூ.14.8 லட்சம் பறித்து பாலியல் வன்கொடுமை செய்தவர் கைது

நாக்பூர், ஜூன்.2-
மகாராஷ்டிராவைச் சேர்ந்த ராகவேந்திரா கிஷோர் அவஸ்தி (36), திருமண இணையதளம் மூலம் நாக்பூரைச் சேர்ந்த 31வயது பெண்ணை தொடர்பு கொண்டுள்ளார். தன்னை விவாகரத்து பெற்றவர் என அறிமுகம் செய்த ராகவேந்திரா, அந்த பெண்ணை திருமணம் செய்து கொள்ள முடிவு செய்தார். அதன் பின் புதிதாக உடற்பயிற்சி மையம் தொடங்கவுள்ளதாக கூறி அந்தப் பெண்ணிடம் ரூ.14.8 லட்சம் ராகவேந்திரா பெற்றுள்ளார். ஒரு முறை தனியாக சந்தித்தபோது அந்தப் பெண்ணை பாலியல் வன்கொடுமை செய்துள்ளார். ராகவேந்திரா விவாகரத்து பெற்றவர் அல்ல என்பதை அறிந்த அந்தப் பெண், தன்னை ஏமாற்றிவிட்டாக நாக்பூர் போலீஸில் புகார் கொடுத்தார். இதையடுத்து ராகவேந்திராவை நாக்பூர் போலீஸார் கைது செய்தனர்.

# அதிமுகவுக்கு குட்பை சொல்ல போகிறாரா சி.வி.சண்முகம்?

விழுப்புரம், ஜூன்.2-
விழுப்புரம் மாவட்டத்தில் அதிமுகவின் முகமாக கால் நூற்றாண்டு காலமாக அடையாளப் படுத்தப்பட்டவர் சி.வி.சண்முகம். எம்எல்ஏ, எம்.பி, அமைச்சர் பதவிகள் வழங்கப்பட்டன. முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் மறைவுக்கு பிறகு பொதுச் செயலாளர் பழனிசாமியின் காலத்தில் அதிமுகவின் முக்கிய நிர்வாகிகளில் ஒருவராக இருந்தார். இந்நிலையில் தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் அதிமுகவுக்கு ஏற்பட்ட படுதோல்வியால் பழனிசாமிக்கு எதிராக சி.வி.சண்முகம் போர்க்கொடி தூக்கினார். இவருடன் இணைந்து முதல்வர் விஜய் கொண்டு வந்த நம்பிக்கையில்லா தீர்மானத்தை ஆதரித்த முன்னாள் அமைச்சர் எஸ்.பி. வேலுமணி



உள்ளிட்ட எம்எல்ஏக்கள் பழனிசாமியிடம் தஞ்சமடைந்தனர். ஆனால் சி.வி.சண்முகம் செல்லவில்லை.தன்னிடம் இருந்து பறிக்கப்பட்ட விழுப்புரம் மாவட்ட அதிமுக செயலாளர் பதவியை மீண்டும் வழங்க வேண்டும் என பழனிசாமியை சி.வி.சண்முகம் நிர்ப்பந்தித்துள்ளார். முதலில் இணைந்து செயல்படுங்கள், கட்சி பதவி குறித்து பின்னர் பேசிக்கொள்ளலாம் என பழனிசாமி கூறியதாகவும், உடன்பாடு எட்டப்படாததால் பழனிசாமியுடன் சி.வி.சண்முகம் இணைய முன்வரவில்லை என கூறப்படுகிறது.
இந்தச் சூழலில், தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்த விழுப்புரம் மாவட்ட அதிமுக அலுவலகத்தை திடீர் திருப்பமாக பொதுச் செயலாளர் பழனிசாமி தரப்பிடம் சி.வி.சண்முகம் நேற்று ஒப்படைத்துள்ளது பேசுபொருளாகி இருக்கிறது.மயிலம் தொகுதியில் மக்களை சந்தித்து நன்றி தெவிக்கும் பணியை முடித்துக் கொண்டு ஓரிரு நாளில் சென்னை செல்கிறார். அவரிடம் எஸ்.பி. வேலுமணி மூலம் அதிமுக தலைமை மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தலாம் என தெரிகிறது. தன்னிடம் இருந்து பறிக்கப்பட்ட விழுப்புரம் மாவட்ட செயலாளர் பதவியை ஒப்படைக்க வேண்டும் என்பதில் சி.வி.சண்முகம் உறுதியாக இருக்கிறார். இதில் உடன் பாடு எட்டப்படுமா என தெரியவில்லை. பதவி விவகாரத்தில் பழனிசாமியும் கறாராக இருக்கிறார்.பதவி இல்லை என்றால் சி.வி.சண்முகம் முக்கிய முடிவுகளை எடுக்கலாம். அதிமுகவுக்கு குட்பை சொல்லிவிட்டு, தனது அரசியல் எதிர்காலத்தை தீர் மானிக்கலாம் என அவரது ஆதரவாளர்கள் கூறுகின்றனர்.இவரது சாய்ஸ் தவெகவாக இருந்தால், ராஜினாமா செய்த எம்.பி பதவியை மீண்டும் கொடுத்து தமிழக அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி பதவி வழங்குவதாக அமைச்சர் செங்கோட்டையன் மூலமாக காய்கள் நகர்த்தப்படுவதாகவும் கூறப்படுகிறது. மயிலம் தொகுதியில் போட்டியிட்டு வென்றாலும், அமைச்சர் பதவி சாத்தியம் இல்லை. திண்டிவனம் தொகுதியில் வெற்றிபெற்ற விசிகவைச் சேர்ந்த வன்னி அரசு சமூக நீதித்துறை அமைச்சராக இருப்பது காரணமாக கருதப்படுகிறது.ஒரே மாவட்டத்தில் இரு அதிகார மையங்கள் இருந்தால் திமுக ஆட்சியில் பொன்முடி, மஸ்தான் இடையே ஏற்பட்ட சலசலப்பு தவெக ஆட்சியிலும் மீண்டும் ஏற்படலாம் என தவெக தலைமை யோசிக்கலாம் என கூறப்படுகிறது.
இல்லையென்றால் சிறிது காலத்துக்கு மவுனம் காக்கலாம். எனவே சி.வி.சண்முகத்தின் அடுத்தகட்ட நகர்வு என்பது தமிழக அரசியலில் அதிர்வலையை ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# “நான் குதிரை பேரம் செய்வதாகச் சொல்வது கதை…” திருச்சியில் முதல்வர் விஜய் ஆவேசம்

திருச்சி, ஜூன்.2-

“அரசியல் புரிதல் இல்லாமல், கவர்ச்சியில் மயங்கி நமக்கு ஓட்டுப் போட்டுவிட்டதாகச் சொல்கிறார்கள். உங்களுக்கு ஓட்டுப் போட்டால் நல்லவர்கள், எனக்கு ஓட்டுப் போட்டால் அவர்கள் தற்குறியா? இதே மக்கள்தானே இத்தனை ஆண்டுகளாக உங்களுக்கு ஓட்டுப் போட்டார்கள். நீங்கள் தற்குறி எனச் சொன்னவர்கள்தான் உங்கள் அரசியல் வாழ்க்கையை கேள்விக்குறி ஆக்கிவிட்டனர்” என திருச்சியில் முதல்வர் விஜய் பேசினார்.



பெரம்பூர் மற்றும் திருச்சி கிழக்கு தொகுதிகளில் போட்டியிட்ட விஜய், 2 தொகுதிகளிலுமே வெற்றி பெற்றார். இதில் திருச்சி கிழக்கு தொகுதி எம்எல்ஏ பதவியை ராஜினாமா செய்த அவர், இன்று அந்த தொகுதி மக்களுக்கு நன்றி தெரிவிக்க திருச்சிக்கு வந்தார். முதல்வரான பின்னர் திருச்சிக்கு முதன்முறையாக வரும் முதல்வர் ஜோசப் விஜய்க்கு தவெகவினர் பிரம்மாண்ட வரவேற்பு ஏற்பாடுகளை செய்திருந்தனர். 1,000க்கும் மேற்பட்ட போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர். முதல்வரின் வருகைக்கான மாநகரத்தின் பல்வேறு பகுதிகளில் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டது. திருச்சி விமான நிலையத்துக்கு இன்று மதியம் 2.45 மணியளவில் வந்தடைந்த முதல்வர் விஜய்யை, அமைச்சர்கள், தவெக எம்எல்ஏக்கள் மற்றும் மதிமுக எம்.பி துரை வைகோ ஆகியோர் வரவேற்றனர். இதனைத் தொடர்ந்து திருச்சி விமான நிலையம் முதல் ஜோசப் கல்லூரி மைதானம் வரை வேனில் அமர்ந்தபடி சுமார் 10 கிலோ மீட்டர் தூரம் முதல்வர் விஜய், மக்களுக்கு கையசைத்தபடி வந்தார். அதனைத் தொடர்ந்து திருச்சி ஜோசப் கல்லூரியில் அமைக்கப்பட்டிருந்த அரங்கத்துக்கு வந்து சேர்ந்த முதல்வர் விஜய்க்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சி தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கியது.தவெகவின் பிரச்சாரத்துக்கு பயன்படுத்தப்பட்ட பேருந்தின் மீது அமைக்கப்பட்டிருந்த மேடையில் இருந்தபடி அமைச்சர் ஆனந்த் வரவேற்புரையும், முன்னாள் அமைச்சர் கே.ப.கிருஷ்ணன், அமைச்சர் ரமேஷ் ஆகியோர் சிறப்புரையும் வழங்கினர்.அதன்பின்னர் பேசிய முதல்வர் விஜய், “தமிழகத்துக்கு திருச்சி எப்படி ஓர் இதயம் போன்றதோ, அதுபோலவே என் இதயத்துக்கு திருச்சி கிழக்கு தொகுதி மக்கள்.ஆட்சிக்கு வந்து சில வாரங்கள் கூட ஆகவில்லை. 6 மாதம் அமைதியாக இருப்போம் என்று சொன்னவர்களால், ஆறு நாள்கூட அமைதியாக இருக்க முடியவில்லை. பாவம் ஒரு கல்யாண வீட்டில்கூட போய் புலம்புகிறார்கள்.இத்தனை ஆண்டுகளாக மாற்றி மாற்றி ஏமாற்றி ஆண்டு கொண்டிருந்தவர்களை ஒதுக்கிவிட்டு என்னை முதல் சேவகனாக ஆக்கியுள்ளீர்கள். அதற்கு நன்றி. எங்களுக்கு ஆதரவு தெரிவித்த அத்தனை இயக்கங்களின் தலைவர்களுக்கும் நன்றி தெரிவிக்கிறேன்.எம்ஜிஆரின் முதல் தேர்தலில் கூட இவ்வளவு வாக்கு சதவீதம் வாங்கவில்லை என்றார்கள். ஆனால், தவெகவை அவ்வளவு ஆதரித்துள்ளீர்கள். நான் எம்ஜிஆரோடு என்னை ஒப்பிடவில்லை, எம்ஜிஆர் எம்ஜிஆர்தான். 1977ல் நீங்கள் போடாத ஓட்டை 2026ல் நீங்கள் போட்டுள்ளீர்கள். இன்னும் கொஞ்சம் அதிகமாக ஆதரித்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

எதிர்காலத்தில் வரும் அனைத்து தேர்தல்களிலும், உங்கள் ஆதரவை அதிகம் பெறமுடியும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. நீங்கள் அமைத்துக் கொடுத்த ஆட்சியில் எல்லா நன்மைகளையும் கண்கூடாக பார்க்கப் போகிறீர்கள்.

யார் எந்தப் பொறுப்புக்கு போனாலும் கிண்டலும், கேலியும் இருக்கத்தான் செய்யும். அவர்களுக்கு ஒரே வேண்டுகோள். தயவு செய்து நிறுத்தி விடாதீர்கள். அதுதான் எனது ஆற்றல். நீங்கள் பேசிக்கொண்டே இருங்கள். நான் மக்களுக்கு நல்லது செய்துகொண்டே இருப்பேன்.நான் கோட் சூட் போடுவது பற்றி விமர்சிக்கிறார்கள். ஏன் நாம் கோட் சூட் போடக் கூடாதா? அதிகாரம் செய்வோரும், ஆதிக்க சக்திகளும்தான் கோட் சூட் போட வேண்டுமா? நான் கலர் கலராகவா கோட் சூட் போடுகிறேன்? இரண்டே கலர். நம் மனதைப் போல கருப்பு வெள்ளை மட்டுமே.“மக்களுக்காக உழைக்க வந்துள்ள நீ அந்த வேலையை மட்டும் பார், உன்னை விமர்சிப்பவர்களை நாங்கள் பார்த்துக்கொள்கிறோம்” என மக்கள் சொல்கிறார்கள். எனக்கு எதிரிகளே இல்லை என நினைக்க மாட்டேன்.

இப்போதும் இரண்டு பேருக்கும் இடையில்தான் போட்டி. ஒன்று திமுக, இன்னொன்று தவெக. மற்றும் பலருக்கு இங்கே ஒரு வேலையும் இல்லை. விஜய் ஆட்சிக்கு வரக் கூடாது என்று திமுகவும், மற்றும் பலரும் சேர்ந்து ஒரு கூத்து நடத்தினார்களே? இப்படியெல்லாம் கூட நடக்குமா என யோசித்தோம்.

எதிர்காலம் என்பது உங்களுக்காக உண்மையாக உழைக்க வந்த விஜய்யா அல்லது நம் ஆட்சியை தடுக்க முயன்ற ஸ்டாலினா என்பதுதான்தான் போட்டி. நம்மை ஏளனமாகப் பேசுவதாக நினைத்து அவர்களே ஆப்பு வைத்துக் கொள்கிறார்கள். திமுக நம்மை அவமானப் படுத்துவதால் நமக்கு நன்மையே. நாம் ஆட்சிக்கு வந்த பின்னர், ஜென்ஸியை மனதில் வைத்து தமிழ், ஆங்கிலம் கலந்து அறிக்கை வெளியிடுகிறார்கள். அதுபற்றி சொல்லவில்லை.

சட்டப்பேரவையில் யார் பேசினால் நமக்கு என்ன என்று நினைத்த கூட்டம் இப்போது அதனை உன்னிப்பாக கவனிக்கிறார்கள். திமுக சொல்வது போல ரீல்ஸ் போட்ட கூட்டம் இப்போது செய்தி பார்க்கிறார்கள். இப்படிப்பட்ட நம் மக்களை, தெய்வங்களை தற்குறிகள் எனச் சொல்கிறார்கள். நீங்கள் தற்குறி எனச் சொன்னவர்கள் தான் உங்கள் அரசியல் வாழ்க்கையை கேள்விக்குறி ஆக்கிவிட்டனர். இனியும் ஆக்குவார்கள். உண்மையில் மக்கள் மனதை புரிந்து வைத்திருந்தால் இப்படி அவர்கள் பேச மாட்டார்கள். அரசியல் புரிதல் இல்லாமல், கவர்ச்சியில் மயங்கி நமக்கு வாக்கு போட்டுவிட்டதாக சொல்கிறார்கள். உங்களுக்கு ஓட்டுப் போட்டால் நல்லவர்கள், எனக்கு ஓட்டு போட்டால் அவர்கள் தற்குறியா? இதே மக்கள்தானே இத்தனை ஆண்டுகளாக உங்களுக்கு ஓட்டுப் போட்டார்கள்.அண்ணா ஆரம்பித்த கட்சியை அடிமைக் கூடாரம் ஆக்கிவிட்டு, ‘உண்மையை சொல் உடன்பிறப்பே?’ என கேள்வி கேட்கிறார். திமுக தோல்விக்கான காரணத்தை அறிய உங்கள் குடும்பத்தில் போய் கேள்வி கேளுங்கள் என உண்மையான திமுக உடன்பிறப்புகள் கூறுகிறார்கள். விஜய்தான் தமிழகத்தின் ஒரே பிரதிநிதி.

மக்களுக்கும், நமக்கும் உள்ள பூர்வஜென்ம பந்தத்தை பிரிக்க முயற்சி செய்தால் பலிக்காது. மக்கள் இப்போது மிகவும் தெளிவாகி விட்டார்கள். ஆக்கப்பூர்வமாக எதிர்க்கட்சியாக செயல்பட்டு மக்கள் மனதை வெல்லப் பாருங்கள்.

கடந்த ஒரு மாதத்தில் 200 யூனிட் இலவச மின்சாரம் கொடுத்துள்ளோம், அதில் ஏற்கெனவே இருந்த 100 யூனிட் திமுக கொடுத்தது இல்லை, ஜெயலலிதா கொடுத்தது. மக்களுக்கு தொந்தரவாக இருக்கும் டாஸ்மாக்கை மூடினோம். முடிந்த அளவு விவசாய பயிர்க் கடன் தள்ளுபடி செய்துள்ளேன். நீங்கள் நிதி சம்பந்தமான எல்லா கதவுகளையும் மூடி வைத்துவிட்டு அல்லவா சென்றுள்ளீர்கள். அதனை சரிசெய்ய வேண்டாமா? நான் பொய் சொல்லி ஏமாற்ற அரசியலுக்கு வரவில்லை. உங்கள் கூட நிற்கவே வந்துள்ளேன். விவசாயிகள் கவலைப்பட வேண்டாம்.சட்டம் ஒழுங்கு சரியில்லை என புலம்புகிறீர்கள். உங்கள் மாடல் அரசில் எல்லா ஊரிலும், தெருவிலும் போதைப் பொருள் கலாச்சாரம் பரவியுள்ளது. அதனை ஆரம்பத்திலேயே சரிசெய்திருந்தால், பெண்களுக்கு எதிராக இவ்வளவு குற்றங்கள் நடந்திருக்குமா?எல்லாவற்றையும் செய்துவிட்டு பழியை என் மீது போடுகிறீர்கள். என்ன பழி போட்டாலும், மக்கள் நிம்மதியாக வாழும் சூழலை உருவாக்குவேன். அதற்காகவே நல்ல அதிகாரிகளை நியமித்துள்ளேன். சிங்கப்பெண் உள்ளிட்ட உறுதியான நடவடிக்கைகளை எடுத்துள்ளேன். என் மீது என்ன பழிபோட்டாலும், விஜய் மக்களுக்கு நல்லது செய்தே தீருவேன். ஆட்சியில் இல்லாதவர்கள் பற்றி ஏன் பேசுகிறீர்கள் என கேட்பார்கள். வேரில் வெந்நீர் ஊற்றியவர்களை பற்றி பேசாமல் இருக்க முடியுமா?

குதிரை பேரம் செய்கிறேன் என தவறான கதைகளை அடித்து விடுகிறார்கள். தீய சக்தியும், தீர்ந்து போன சக்தியும் ஒன்றாக சேர்ந்து, திருட்டுத்தனமாக பேரம் பேசி கூட்டுச் சேர்ந்து ஆட்சியமைத்து கொள்ளையடிக்க சதித் திட்டம் தீட்டினார்கள். ஏனென்றால், தவெக ஆட்சி அமைந்தால் அவர்கள் பிழைப்பே போய்விடும் என்பதுதான். நடந்து முடிந்த தேர்தலில் 50, 60 ஆண்டுகளாக இருந்த சாதி, மதம், காசு கொடுத்து வாக்கு வாங்கும் முறையை ஒழித்துள்ளோம்.நம்மை ஆதரிப்பவர்களை நிச்சயம் அரவணைப்போம். தவெக ஆட்சி எந்தப் பாகுபாடும் இல்லாத ஆட்சியாக இருக்கும். ஸ்டாலின் ஆட்சி போல ஊசலாட்டம் இருக்காது. மதசார்பற்ற கொள்கை, மாநில உரிமை, நதிநீர் உரிமை, சமூக நீதியை விட்டுக் கொடுக்கவே மாட்டோம்.திருச்சி கிழக்கு, பெரம்பூர் தொகுதி இரு கண்கள் மாதிரி. வரும் இடைத்தேர்தலில் உங்கள் வீட்டில் உள்ள ஒருவரை வேட்பாளராக்குவோம். அவரை வெற்றி பெற வையுங்கள். ஊழல் இல்லாத, லஞ்சம் இல்லாத ஆட்சியை நிச்சயம் உருவாக்குவேன்” என்று முதல்வர் விஜய் பேசினார்.

## உச்ச நீதிமன்ற நீதிபதிகளாக வெங்கிட சுப்ரமணி மோகனா உட்பட ஐவர் நியமனம்

புதுடெல்லி, ஜூன்.2-

தமிழகத்தைச் சேர்ந்த வெங்கிட சுப்ரமணி மோகனா உட்பட 5 பேர் உச்ச நீதிமன்ற நீதிபதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர். இதற்கான ஒப்புதலை குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு வழங்கியுள்ளார்.



இது தொடர்பாக மத்திய சட்ட அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், “இந்திய அரசியலமைப்பின் 124வது பிரிவின் உட்பிரிவு 2ன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி, இந்திய உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியுடன் கலந்தாலோசித்து, 5 பேரை இந்திய உச்ச நீதிமன்ற நீதிபதிகளாக நியமிப்பதில் இந்திய குடியரசுத் தலைவர் மகிழ்ச்சி அடைகிறார்.நீதிபதிகளாக நியமிக்கப்பட்டுள்ள பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி ஷீல் நாகு, மும்பாய் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி சந்திரசேகர், மத்தியப் பிரதேச உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி சஞ்சீவ் சச்தேவா, ஜம்மு காஷ்மீர் மற்றும் லடாக் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி அருண் பல்லி, உச்ச நீதிமன்ற மூத்த வழக்கறிஞர் வெங்கிட சுப்ரமணி மோகனா ஆகியோருக்கு எனது நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

இந்த நியமனங்களின் மூலம் உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை 37 ஆக அதிகரித்துள்ளது. உச்ச நீதிமன்றத்தின் அனுமதிக்கப்பட்ட நீதிபதிகளின் எண்ணிக்கை 38 எனும் நிலையில், இன்னும் ஒரு நீதிபதிக்கான இடம் மட்டுமே காலியாக உள்ளது.உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலைமையிலான கொலிஜியம் இந்த ஐந்து பெயர்களையும் கடந்த மே 27ம் தேதி மத்திய சட்ட அமைச்சகத்துக்கு பரிந்துரைத்தது. பரிந்துரைக்கப்பட்ட 4 நாட்களில் இந்த நியமனங்கள் செய்யப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியாக சூர்யகாந்த் பதவியேற்றதை அடுத்து அவரது தலைமையில் கொலிஜியம் மேற்கொண்ட முதல் பரிந்துரை இது என்பது குறிப்பிடத்தக்கது.

## அரசு மருத்துவமனைகளில் 24 மணி நேரமும் மருத்துவர்கள் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்

### டிடிவி தினகரன் வலியுறுத்தல்

சென்னை, ஜூன்.2-

அரசு மருத்துவமனைகளில் 24 மணி நேரமும் மருத்துவர்கள் இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்று, அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் வலியுறுத்தியுள்ளார்.



இதுதொடர்பாக, அவர் வெளியிட்ட அறிக்கை: திருப்பத்தூர் அருகே குனிச்சி ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவர்கள் இல்லாத காரணத்தினால், காயமடைந்த நிலையில் வந்த நபருக்கு தூய்மைப் பணியாளர் ஒருவர் சிகிச்சை அளிப்பது போல ஊடகங்களில் வெளியாகியிருக்கும் செய்திகள், தமிழகத்தின் சுகாதார கட்டமைப்பு எவ்வளவு மோசமான நிலையில் இருக்கிறது என்பதை வெளிச்சம் போட்டு காட்டிகிறது.

அரசு மருத்துவர்கள், செவிலியர்கள் உட்பட அடிப்படை பணியாளர்கள் கூட இல்லாமல் இருப்பதும், தூய்மைப் பணியாளர்கள் சிகிச்சை அளிப்பதும் அங்கு வரும் பொது மக்கள் மற்றும் நோயாளிகளின் உயிரோடு விளையாடும் செயலாகும்.

எனவே, தமிழகம் முழுவதும் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் தொடங்கி அரசு தலைமை மருத்துவமனைகள் வரை உரிய ஆய்வு மேற்கொண்டு, அங்கு 24 மணிநேரமும் சுழற்சி அடிப்படையில், மருத்துவப் பணியாளர்கள் இருப்பதை தமிழக அரசும், சுகாதாரத் துறையும் உறுதி செய்ய வேண்டும். இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## டெல்லியில் கல்வி அமைச்சக அலுவலகத்தில் தீ விபத்து

டெல்லி, ஜூன்.2-

டெல்லியில் ஒன்றிய கல்வி அமைச்சக அலுவலகத்தில் தீ விபத்து ஏற்பட்டது. மத்திய டெல்லியில் ஐடிஓ பகுதியில் அமைந்துள்ள மத்திய கல்வி அமைச்சக வளாகத்தில் இயங்கும் திட்டமிடல் மற்றும் கட்டிடக்கலை பள்ளி (எஸ்பிஏ) அலுவலகத்தின் 2வது மாடியில் தீ விபத்து ஏற்பட்டது.இந்த விபத்து தொடர்பாக டெல்லி தீயணைப்பு துறைக்கு தகவல் கொடுக்கப்பட்ட நிலையில் தீயணைப்பு வீரர்கள் சென்று தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். மேலும், காலை நேரம் என்பதால் இந்த விபத்தில் உயிரிழப்புகளோ, காயமோ ஏற்படவில்லை.

இந்த நிலையில் நீட் வினாத்தாள் கசிவு, சிபிஎஸ்இ பிளஸ் 2 தேர்வு முடிவுகளில் குளறுபடி என அடுத்தடுத்து பிரச்சனைகள் ஏற்பட்டு வரும் நிலையில், ஒன்றிய கல்வி அமைச்சக அலுவலகத்தில் ஏற்பட்ட இந்த தீ விபத்து பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது



## மதுரை சோழவந்தானில் அரசுப் பேருந்து ஓட்டுநரை தவெக நிர்வாகி கத்தியால் தாக்கியதால் பரபரப்பு!

மதுரை, ஜூன்.2-

மதுரை சோழவந்தானில் அரசுப் பேருந்து ஓட்டுநரை தவெக நிர்வாகி கத்தியால் தாக்கியதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. 55 அரசு பேருந்துகளை இயக்காமல் ஓட்டுநர், நடத்துநர்கள் பணி புறக்கணிப்பு போராட்டம் நடத்தி வருகின்றனர். அரசுப் பேருந்து ஓட்டுநர் பிரசாந்தை தாக்கிய தவெக நிர்வாகி தனுஷ்கோடி மீது நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை விடுத்துள்ளனர்

## “சிபிஎஸ்இக்குள் பிக் பாக்கெட் திருடர்கள்… ஜாக்கிரதை!” ராகுல் எச்சரிக்கை

புதுடெல்லி, ஜூன்.2-

சிபிஎஸ்இ விடைத்தாள்களை மறுமதிப்பீடு செய்வதற்கு கட்டணங்கள் என்ற பெயரில் பணம் கொள்ளையடிக்கப் படுவதாகவும், சிபிஎஸ்இக்குள் இருக்கும் பிக்பாக்கெட் திருடர்களிடம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்றும் ராகுல் காந்தி விமர்சித்துள்ளார்.



சிபிஎஸ்இ 12ம் வகுப்பு மாணவர்களின் விடைத்தாள்களை திருத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ஓஎஸ்எம் முறை (On-Screen Marking - OSM) காரணமாக மதிப்பெண்கள் குறைந்துள்ளதாக மாணவர்கள் பலர் குற்றம் சாட்டி இருந்தனர். வேதாந்த் என்ற ஒரு மாணவர் மறுமதிப்பீட்டுக்காக விடைத்தாள் கோரி இருந்த நிலையில் அவருக்கு வேறொருவரின் விடைத்தாள் கொடுக்கப்பட்டது குறித்து சமூக ஊடக பக்கத்தில் பகிர்ந்த நிலையில், அவரது சமூக ஊடக கணக்கு பாகிஸ்தானில் இருந்து இயக்கப்படுவதாக குற்றம் சாட்டப்பட்டது.

இந்நிலையில், வேதாந்த் உள்ளிட்ட சிபிஎஸ்இ12ம் வகுப்பு தேர்வெழுதி பாதிக்கப்பட்ட மாணவர்கள் சிலருடன் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி கலந்துரையாடினார். அவர் தனது உரையில், “ஓஎஸ்எம் முறை தொடர்பாக மாணவர்கள் பலர் புகார்களை தெரிவித்துள்ளனர். கல்வித்துறை என்பது ஒரு வணிகமாகப் பார்க்கப்படுகிறது. அதில் ஏற்படும் நிர்வாகத் தவறுகளுக்கான விலையை மாணவர்களே சுமக்க நேரிடுகிறது. விடைத்தாள் நகல்களைப் பெறுவதற்கும், மதிப்பெண்களை மறு கூட்டல் செய்வதற்கும், மறு மதிப்பீடு செய்வதற்கும் வசூலிக்கப்படும் கட்டணங்கள் பிக்பாக்கெட் திருடர்கள் சிபிஎஸ்இக்குள் இருப்பதையும் அவர்களிடம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்பதையுமே காட்டுகிறது. கணினிமயமாக்கப்பட்ட விடைத்தாள் நகலைப் பெற ஒரு பாடத்துக்கு ரூ.100 கட்டணம், மறுகூட்டல் கோருவதாக இருந்தால் ஒரு விடைத்தாளுக்கு ரூ.100 கட்டணம், மறுமதிப்பீடு கோருவதாக இருந்தால் ஒரு கேள்விக்கு ரூ.25 கட்டணம் வசூலிக்கப்படுகிறது. அந்த வகையில் ஒரு மாணவர் தனது சொந்த விடைத்தாளை துல்லியமாக மதிப்பிட ரூ.2,000 வரை செலுத்த வேண்டி இருக்கலாம். இதற்காக 4 லட்சம் மாணவர்கள் விண்ணப்பிக்கும்போது சிபிஎஸ்இ எவ்வளவு வருவாயை ஈட்டுகிறது என்பதை சற்று கற்பனை செய்து பாருங்கள்.

கைபேசிகளைப் பயன்படுத்தி விடைத்தாள்களை ஸ்கேன் செய்யும்போது, மதிப்பிடுவதில் பிழைகள் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிவிடுகிறது. அந்த பிழைகளைச் சரி செய்வதற்கான செலவை மாணவர்கள் ஏற்க வேண்டி இருக்கிறது. சிபிஎஸ்இயின் தவறுகளுக்கான தண்டனை மாணவர்கள் மீது விழுகிறது. அதனால் கிடைக்கும் லாபம் அரசாங்கத்துக்குச் செல்கிறது.கல்வி என்பது ஒரு சேவையாகப் பார்க்கப்படாமல், ஒரு வணிகமாகப் பார்க்கப்படும்போது பிழைகள் சரி செய்யப்படுவதில்லை. மாறாக, அவை பன்மடங்கு பெருகுகின்றன. இதற்கான மிகக் கடுமையான விலையை நம் குழந்தைகளே செலுத்தி வருகிறார்கள். அதோடு, தங்கள் நேரம், தங்கள் தன்னம்பிக்கை, தங்கள் எதிர்காலம் ஆகியவற்றையும் அவர்கள் இழக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்படுகிறார்கள்.

நீட் தேர்வு மட்டுமல்ல, சிபிஎஸ்இ தேர்வும் நிதிமயமாக்கப்பட்டுவிட்டது. அதீத அதிகார குவிப்பு ஒரு சிக்கலாகி, அது அமைப்பின் ஒரு பெரும் தோல்வியாகிவிடுகிறது. மாறாக, பரவலாக்கப்பட்ட அமைப்பு இருந்தால் ஒரு பக்கம் செயலிழந்தாலும் மற்றொரு பக்கத்தின் மூலம் உங்களால் அதைச் சமாளிக்க முடியும். எனவே, இந்திய கல்வி முறை இப்போது ஒரு கட்டமைப்புச் சிக்கலில் உள்ளது. மாணவர்களுக்கு ஒளிமயமான எதிர்காலம் கிடைக்க வேண்டும். காங்கிரஸ் அதை உறுதி செய்யும்” என தெரிவித்தார்.



■ எரிசக்தி வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் சி.டி.ஆர்.நிர்மல் குமார், தனக்கன் குளம் வெங்கலமூர்த்தி நகரில் காவிரி கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் 350க்கும் மேற்பட்ட வீடுகளுக்கு குடிநீர் வழங்கும் வகையில் புதிய குழாய்கள் பதிக்கும் திட்டப்பணிகளை தொடங்கி வைத்து பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்தார்.



## “மாநில அளவில் டாப் ரேங்க்!” புளியங்குடி வீராசாமி செட்டியார் பாலிடெக்னிக் மாணவர்களின் இமாலய சாதனை!

புளியங்குடி, ஜூன்.2-

நெல்லை புளியங்குடி எஸ். வீராசாமி செட்டியார் பாலிடெக்னிக் கல்லூரியில், ஏப்ரல் 2026 அரசு வாரியத் தேர்வில் மாநில அளவில் முதலிடங்களை பிடித்து வரலாற்றுச் சாதனை படைத்த மாணவ, மாணவிகளுக்குப் பாராட்டு விழா கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.இத்தேர்வில் இக்கல்லூரியைச் சேர்ந்த முகமது சுனைத், ஆதிலா ஆகிய இரண்டு மாணவர்கள் மாநில அளவில் முதலிடத்தையும்; பாலாஜி, முகமது ஆரிப், நர்மதா, மஞ்சு மனிஷா ஆகிய நான்கு மாணவர்கள் மாநில அளவில் இரண்டாமிடத்தையும் பிடித்து வீராசாமி செட்டியார் கல்விக் குழுமத்திற்குப் பெருமை சேர்த்துள்ளனர். மாணவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, கல்விக் குழுமங்களின் தலைவர் டாக்டர் வி. முருகையா மாநில அளவில் முதலிடம் பிடித்த இரண்டு மாணவர்களுக்கும் தலா 2 கிராம் தங்க நாணயத்தையும், இரண்டாமிடம் பிடித்த நான்கு மாணவர்களுக்கும் தலா 15,000 ரூபாய் ஊக்கத்தொகையையும் வழங்கி அதிரடியாகக் கௌரவித்தார். இந்நிகழ்ச்சிக்குச் செயல் இயக்குனர் விக்னேஷ் வீராசாமி தலைமை தாங்கினார். பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் இசக்கிமுத்து, மேலாளர் தங்கப்பன் பிள்ளை ஆகியோர் முன்னிலை வகித்தனர்.பொறியியல் கல்லூரி முதல்வர் டாக்டர் பி. மணிகண்டன், கல்வியியல் கல்லூரி முதல்வர் டாக்டர் சுப்பிரமணியன், கல்விக் குழுமங்களின் இயக்குனர் டாக்டர் கலைவாணி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். கணினியியல் துறைத் தலைவர் பரமசிவன் நன்றி உரையாற்றினார்.



■ சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் க.இளம்பகவத், இ.ஆ.ப., தலைமையில் இந்த அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.மாவட்டம் முழுவதும் சீரான குடிநீர் விநியோகம் செய்வதை உறுதிப்படுத்துதல், பழுதடைந்த தெருவிளக்குகளை முறையாகப் பராமரித்தல் மற்றும் நகர்ப் பகுதிகளில் தூய்மைப் பணிகளை தொய்வின்றி மேற்கொள்வது குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டு, அதிகாரிகளுக்கு உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.வாணி ஈஸ்வரி ரு திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை), சுலைமான் சேட் ரு உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்), அருளாளன் ரு உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) உள்ளிட்ட தொடர்புடைய துறை சார்ந்த அரசு உயர் அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் பலர் நேரில் கலந்து கொண்டனர்.



## கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர் அதிரடி உத்தரவு! “மனுக்கள் மீது உடனே ஆக்ஷன் எடுங்க!” அதிகாரிகளுக்குக் கெடு!

தென்காசி, ஜூன்.2-

தென்காசி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல்கிஷோர், இ.ஆ.ப. தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடம் இருந்து இலவச வீட்டுமனைப் பட்டா, முதியோர் உதவித்தொகை, அடிப்படை வசதிகள், பட்டா மாறுதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மொத்தம் 369 மனுக்கள் பெறப்பட்டன. தகுதி வாய்ந்த மனுக்களா என்பதைத் தீர விசாரணை செய்து, விரைந்து உரிய நடவடிக்கை மேற்கொண்டு மனுதாரர்களுக்குப் பதில் அளிக்குமாறு சம்பந்தப்பட்ட அனைத்துத் துறை அலுவலர்களுக்கும் அதிரடியாக உத்தரவிட்டார். மேலும், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் ஒரு மாற்றுத்திறனாளிக்கு ரூ.15,750/ மதிப்பிலான சக்கர நாற்காலியினையும் ஆட்சியர் நேரில் வழங்கிச் சிறப்பித்தார்.மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் தண்டபாணி, மகளிர் திட்ட இயக்குநர் எஸ்.அபிதாஹனீப், சங்கரன்கோவில் வருவாய் கோட்டாட்சியர் அனிதா, மண்டல மேலாளர் வெங்கடலெட்சுமி, தனித்துணை ஆட்சியர் பால்துரை மற்றும் மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் ஜெயபிரகாஷ் உட்பட அனைத்துத் துறை அதிகாரிகள் பலர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

## “வெயிலுக்கு இதமாய் தவெகவின் நற்பணி!” வடகரையில் இரண்டு இடங்களில் நீர், மோர் பந்தல் அதிரடி திறப்பு!



தென்காசி, ஜூன்.2-

கோடை வெயிலின் தாக்கத்திலிருந்து பொது மக்களின் தாகத்தைத் தணிக்கும் பொருட்டு, தென்காசி மாவட்டம் கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வடகரையில் தவெக சார்பில் நற்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. தென்காசி மேற்கு மாவட்டத் தவெக சார்பில், வடகரை பகுதியில் உள்ள தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கி (TMB) முன்பாகவும், வடகரை பேருந்து நிறுத்தம் அருகிலும் என இரண்டு முக்கிய இடங்களில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காகப் பிரம்மாண்ட நீர், மோர் பந்தல் திறப்பு விழா நடைபெற்றது. இம்முகாமினை தென்காசி மேற்கு மாவட்டச் செயலாளர் நியாஸ் நேரில் கலந்துகொண்டு, பொதுமக்களுக்குக் குளிர்ந்த நீர்மோர் மற்றும் கோடைக்காலப் பழங்களை வழங்கி முறைப்படி துவக்கி வைத்தார்.இந்நிகழ்ச்சியில் தவெக முக்கிய நிர்வாகிகள் மைதீன், சையது அம்பியா, மாவட்ட மாணவரணி கருப்பசாமி, கடைக்குட்டி ராஜா, அமான் ரசாக், சேக்உதுமான், வடகரை ராமர், கரிசல் முத்துக்குமார், அலி, அமான்உலா, மைதின், சையது சுலைமான், ராஜா (எ) கட்டகுட்டி, ஷேக்முகமது, ஷேக்ஒலி, அருணாச்சலம் மற்றும் தென்காசி மேற்கு மாவட்ட, சார்பு அணி, நகர, ஒன்றிய நிர்வாகிகள், பொதுமக்கள் என ஏராளமானோர் திரளாகக் கலந்து கொண்டனர்.



## “1964 முதல் தொடரும் கைப்பந்து பாரம்பரியம்!” சேலத்தில் திருப்பூர் குமரன் குழுவினரின் சம்மர் கேம்ப் நிறைவு!

சேலம், ஜூன்.2-

சேலம் கன்னங்குறிச்சி அரசு மேல்நிலைப்பள்ளி எதிரே உள்ள கே.ஆர். சின்னப்பையன் நினைவு விளையாட்டுத் திடலில், 1964இல் துவங்கப்பட்டுப் புகழுடன் செயல்பட்டு வரும் 'திருப்பூர் குமரன் கைப்பந்து குழுவினர்' சார்பில், கடந்த ஏப்ரல் 20ஆம் தேதி முதல் ஒரு மாத காலம் நடைபெற்ற கோடைகாலப் பயிற்சி முகாம் மிகச் சிறப்பாக நிறைவடைந்துள்ளது. திருப்பூர் குமரன் கைப்பந்து குழு தலைவர் பொன் சுந்தரம் தலைமையில் நடைபெற்ற இந்த முகாமில், செயலாளர் சக்கரவர்த்தி மற்றும் பயிற்சியாளர்கள் சந்திரன், தரணிவேந்தன், சிவராஜ், பவித்ரன், கௌதம், சேகர் ஆகியோரைக் கொண்ட நிபுணர் குழுவினர் 40க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகளுக்குச் சிறப்பான மற்றும் நுணுக்கமான கைப்பந்து பயிற்சிகளை வழங்கினர்.

முகாமில் பங்கேற்றுப் பயிற்சி பெற்ற அனைத்து மாணவர்களுக்கும் குழுவின் சார்பில் இலவசமாகச் சீருடைகள் வழங்கப்பட்டன. இக்குழுவினர் சார்பில் தினசரி காலை 6:30 முதல் 9:00 மணி வரையிலும், மாலை 4:30 முதல் 7:00 மணி வரையிலும் தொடர்ந்து மாணவர்களுக்கு இலவசமாகப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இவர்களிடம் பயிற்சி பெற்ற மாணவர்கள் ஏற்கனவே தேசிய அளவிலான போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்று, சேலம் மண்ணிற்குப் பெருமை சேர்த்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



■ திருப்பூர் கலெக்டரேட்டில் மக்கள் அலைமோதிய குறை தீர்க்கும் நாள் கூட்டம்: மாவட்ட வருவாய் அலுவலர் க. கார்த்திகேயன் முன்னிலையில், மாவட்ட ஆட்சித்தலைவர் மணிஷ் நாரணவரே, இ.ஆ.ப., தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்திருந்த ஏராளமான பொதுமக்கள் தங்களது முதியோர் உதவித்தொகை, இலவச வீட்டு மனைப் பட்டா, குடிநீர் வசதி, சாலை வசதி உள்ளிட்ட பல்வேறு அடிப்படைத் தேவைகள் குறித்த கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சியரிடம் நேரில் வழங்கினர். பொதுமக்களிடம் இருந்து மனுக்களைப் பெற்றுக்கொண்ட ஆட்சியர், அவற்றைச் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடம் வழங்கி, உரிய விசாரணை நடத்தி விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட்டார்.

## ஹூண்டாய் மொபிஸ் தொழிற்சாலையில் தீ விபத்து: பல கோடி மதிப்பிலான பொருட்கள் சேதம்

ஸ்ரீபெரும்புதூர், ஜூன்.2-

ஸ்ரீபெரும்புதூர் அடுத்த இருங்காட்டுக்கோட்டை சிப்காட் தொழிற்பேட்டையில் செயல்பட்டு வரும் ஹூண்டாய் மொபிஸ் கார் உதிரிபாகங்கள் தயாரிப்பு தொழிற்சாலையில் நேற்று ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் பல கோடி மதிப்பிலான உற்பத்தி பொருட்கள் எரிந்ததாக தகவல் வெளியாகி உள்ளது.



காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் அடுத்த இருங்காட்டுக்கோட்டை சிப்காட் தொழிற்பேட்டையில் ஹூண்டாய் மொபிஸ் என்ற நிறுவனம் செயல்பட்டு வருகிறது. கார்களுக்கான டேஷ்போர்டு, ஏர்பேக் தயாரிக்கும் பிரிவில் நேற்று திடீரென தீப்பற்றியது.

அப்பகுதியில் சேமித்து வைக்கப்பட்டிருந்த பிளாஸ்டிக், எளிதில் தீப்பற்றக்கூடிய மூலப்பொருட்களால் வேகமாக தீ பரவியதாக கூறப்படுகிறது. தீ விபத்தால் தொழிற்சாலை வளாகம் முழுவதும் அடர்ந்த கரும்புகை சூழ்ந்தது.

தகவலறிந்த ஸ்ரீபெரும்புதூர், இருங்காட்டுக்கோட்டை, ஒரகடம் உள்ளிட்ட பகுதிகளிலிருந்து 6க்கும் மேற்பட்ட தீயணைப்பு வாகனங்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து தீயை கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டன.

பல மணி நேர போராட்டத்துக்குப் பிறகு தீ பரவாமல் தடுக்கப்பட்டது. தீ விபத்து ஏற்பட்டதும் தொழிற்சாலையில் பணியாற்றிய 500க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டதால் உயிர்சேதம் தவிர்க்கப்பட்டது.

இந்த விபத்தில் தயாரித்து வைக்கப்பட்டிருந்த டேஷ்போர்டுகள், ஏர்பேக்குகள் மற்றும் பிற உதிரிபாகங்கள் முற்றிலும் எரிந்து சேதமடைந்தன. சேத மதிப்பு பல கோடியைத் தாண்டும் என முதற்கட்டமாக மதிப்பிடப்பட்டுள்ளது. கோடை கால வெப்பம் மற்றும் மின் கசிவு உள்ளிட்ட காரணங்களால் தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ள நிலையில், ஸ்ரீபெரும்புதூர் காவல் துறையினரும் தீயணைப்புத் துறையினரும் இணைந்து தீ விபத்துக்கான காரணம் குறித்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.



## வாழ்த்து

■ மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் புதிய மாவட்ட ஆட்சித்தலைவராக ப. ஆகாஷ், பொறுப்பேற்றுக் கொண்டார்.அவருக்கு அரசு அதிகாரிகள் பணியாளர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.

## பெட்ரோல் ஏற்றுமதி வரி பாதியாகக் குறைப்பு

புதுடெல்லி, ஜீன்.2-

மத்திய நிதி அமைச்சகம் வெளியிட்டுள்ள அதிகாரப்பூர்வ அறிவிக்கையில் கூறியிருப்பதாவது: பெட்ரோல் மற்றும் டீசல் ஏற்றுமதிக்கான ‘சாலை மற்றும் உள் கட்டமைப்பு வரி' முற்றிலும் நீக்கப்படுகிறது. அதே வேளையில், உள்நாட்டுப் பயன்பாட்டிற்காக விநியோகிக்கப்படும் பெட்ரோல், டீசல் மீதான தற்போதைய வரி விகிதங்களில் மாற்றம் இல்லை.

பெட்ரோல் ஏற்றுமதிக்கான கூடுதல் லாப வரி பாதியாகக் குறைக்கப்பட்டு, ஒரு லிட்டருக்கு ரூ.1.50 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதேபோல், டீசல் ஏற்றுமதி மீதான வரி லிட்டருக்கு ரூ.16.50லிருந்து ரூ.13.50 ஆகவும், விமான எரிபொருள் மீதான வரி லிட்டருக்கு ரூ.16லிருந்து ரூ.9.50 ஆகவும் குறைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தலைமை செயலக ஊழியர்களுக்கு பயோமெட்ரிக் நடைமுறை அமலுக்கு வந்தது

சென்னை, ஜூன்.2-

சென்னை, தலைமை செயலக வளாகத்தில் முதல்வர், அமைச்சர்கள், அரசு அலுவலகங்கள் செயல்படுகிறது. இந்த வளாகத்தில் 10 மாடி கொண்ட நாமக்கல் கவிஞர் மாளிகை உள்ளது.



தலைமை செயலகம் மற்றும் நாமக்கல் கவிஞர் மாளிகையில் சுமார் 50க்கும் மேற்பட்ட செயலாளர்கள், இயக்குனர்கள், நிர்வாக இயக்குனர்கள், ஊழியர்கள் பணியாற்றி வருகிறார்கள். இவர்கள் சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து பணிக்கு வருகிறார்கள். இவர்கள் காலை 10 மணிக்கு பணிக்கு வந்து மாலை 5.45 மணி வரை வேலை செய்கிறார்கள்.

தலைமை செயலகத்தில் மட்டும் சுமார் 2,500க்கும் மேற்பட்ட பணியாளர்கள் வேலை செய்து வருகிறார்கள். இவர்களுக்கு ஜூன் 1ம் தேதி (இன்று) முதல் பயோமெட்ரிக் வருகை பதிவேடு கட்டாயம் என மனிதவள மேலாண்மை துறை செயலாளர் உத்தரவிட்டு இருந்தார். தலைமை செயலகத்தில் மனிதவள மேலாண்மை துறையில் 500க்கும் மேற்ட்ட பணியாளர்கள் வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு இன்று (1ம் தேதி) முதல் பயோமெட்ரிக் மூலம் வருகை பதிவு கட்டாயம் ஆக்கப்பட்டுள்ளது.

கடந்த சில மாதங்களுக்கு முன் பயோமெட்ரிக் முறை அமல்படுத்தப்பட்டது. அப்போது தலைமை செயலக பணியாளர் சங்கம் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். இதனால் பயோமெட்ரிக் நடைமுறை திரும்பப் பெறப்பட்டது. காரணம், பயோமெட்ரிக் முறை பயன்படுத்தினால் ஊழியர்கள் பணிக்கு எப்போது வருகிறார்கள், எப்போது திரும்புகிறார்கள் என்பது தெளிவாக தெரியவரும். இதனால் பணியாளர்களுக்கு சிக்கல் ஏற்படுவதால், இதற்கு அவர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இந்நிலையில், தமிழக தலைமைச் செயலக வரலாற்றிலேயே முதல்முறையாக, மனிதவள மேலாண்மைத் துறை தனது அனைத்து அதிகாரிகள் மற்றும் பணியாளர்களுக்கு முதல் பயோமெட்ரிக் (Biometric) அல்லது முக அங்கீகார (Face ID) அடிப்படையிலான வருகைப்பதிவை கட்டாயமாக்கியுள்ளது. படிப்படியாக இந்த நடைமுறை தலைமை செயலகத்தில் மற்ற துறைகளுக்கும், அனைத்து அரசு அலுவலகங்களில் நடைமுறைப்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது




SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000